**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**எம்.சி.ஓ.பி.எண் 348/2019**
**நாள் 29/10/2025 புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – அசோக்குமார் (PW1) | த/பெயர் – கணக்கையன் |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. நான் கார் ஓட்டி சென்றபோது மேற்படி விபத்து ஏற்பட்டதா என்றால் ஆமாம். விபத்து எப்படி ஏற்பட்டது என்றால் நான் கார் ஓட்டி சென்றுக்கொண்டிருந்த போது பின்பக்கமாக ஒரு வாகனம் வந்து மோதிவிட்டது. நான் காரை நிருத்தி கீழே இறங்கி ஏன் என் வாகனத்தை இடித்தீர்கள் என கேட்டுக்கொண்டிருந்த போது பின்னால் வந்த வேன் என் மீது மோதி விபத்து ஏற்ப்பட்டுவிட்டது. என் வண்டியை இடித்ததும் ஒரு வேன் தான் என்றும் பின்னர் என்னை இடித்ததும் மற்றொரு வேன் தான் என்றால் சரிதான். அந்த வேனின் பதிவு எண்கள் தெரியுமா என்றால் தெரியும் TN 18 AK 9900 என்ற வேன் என் காரையும் TN 02 AK 2209 என்ற வேன் என் மீதும் மோதியது. முதலில் என் காரை வேன் மோதாமல் இருந்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான்.

2. எனக்கு நடந்த விபத்திற்கு என் காரை இடித்த வேன் தான் முக்கியமான காரணம் என்றால் சரியல்ல. நான் தற்போதும் ஓட்டுநர் வேலை தான் செய்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி விபத்தில் மேற்படி விபத்தில் எனக்கு என்ன காயம் ஏற்பட்டது என்றால் வலது கை கட்டை

விரலும் சுண்டு விரல் துண்டாகிவிட்டது. 2019ம் ஆண்டு விபத்து ஏற்பட்டதும் இராமச்சந்திரா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளேன் என்றும் அதன் பின்னர் சிகிச்சை எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், என்னிடம் உள்ளது. விபத்து என் காரை இடித்த வேன் ஓட்டுநரின் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3. என் காரை இடித்தவுடன் நான் அவசரமாக காரில் இருந்து இறங்கி சாலையில் நின்றதால் தான் பின்னால் வந்த வேன் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு நானும் என் காரை இடித்த வேனின் ஓட்டுநர் தான் முழுமையான காரணம் என்றால் சரியல்ல. நான் தற்போது என்ன வேலை செய்கிறேன் என்றால் எந்த வேலையும் செய்யவில்லை, என் தாய், தந்தை என்னை பராமறித்து வருகின்றனர். என் காரை இடித்த வாகனத்தின் உாிமையாளரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்றும் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எனக்கு இழப்பீடு வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**